உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் யசு { விக்கிரம—ஐப்பசி } மலர் எ

க.	பொழிற்றொண்டர் கருத்துரைகள்	243
உ.	விண்ணப்பம்	247
௩.	கலைச்சொல் லாக்கம்	248, 278
ச.	மாணிக்கவாசகர் திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்	251
ரு.	கலைச்சொல் லாக்கம் திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி.	259
சு.	யானை வேட்டுவன் திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ.	264
எ.	மெய்ப்பாட் டியல் திரு. எஸ். சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.	266
அ.	சங்கச் செய்திகள்	280
கூ.	நன்கொடைகள்	282

பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௬	விக்கிரம—ஐப்பசி	மலர் எ

உ

பொழிற்றெண்டர் கருத்துரைகள்

நமது பொழில் வெளியீட்டின் நோக்கங்களுள், தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழர்களைக் குறித்து வரும் ஆராய்ச்சிகளைப் போற்றுதலும் ஒன்றாகும். இத்தகைய ஆராய்ச்சிகள், நாளிதழ், திங்களிதழ், தனி நூல் முதலிய வழிகளில் வெளிவந்துள்ளன, வருகின்றன. இவற்றால், ஐயம், அறியாமைகட் குரிய பலவகைப் பொருள்கள், அறிஞர் பலரும் தத்தம் கருத்துக்களை வெளியிடுவதன் மூலம், விளக்கம் பெற்று ஒரு முடிந்த முடிபிற்கு வருதல் இயலும்.

இத்தகைய ஆராய்ச்சிகளின் நோக்கம், ஆராய்ச்சிப் பொருளின் உண்மை அறிதலைப் பற்றியதன்றி, ஆராய்ச்சி செய்வாரைப் பற்றியதன்றாகலின், ஆராய்ச்சி உரைகள், எதிர் உரையாளரை எவ்விதத்திலும் சிறிதும் குறை கூறுதலின்றி, அவர் தம், ஆராய்ச்சி உரைகளின் பொருத்தம் பொருந்தாமைகளையே விளக்கிச் செல்வனவாதல் வேண்டும். மேலும், இவ் வாராய்ச்சிகள் கூடியவரை சுருங்கக் கூறி விளங்க வைப்பனவாகல் வேண்டுமாதலின், அரிய பொருள்களே செறிவு பெற்றுவரும் இவ் வாராய்ச்சிகளில் அவையடக்க முதலாயவை வேண்டற்பாலவல்ல. கூறி முடித்த கருத்துக்களை மீண்டும் மீண்டும் கூறிவரு

தலும் வேண்டற்பால தன்று. மேலும், ஒரே குறிப்புப்பற்றி முன்னுரையும் எதிர் உரையுமாகப் பலகாலும் தொடர்ந்து போதல், முடிபின்மையாகிய நிலைமையைத் தருமாகலின், தாம் தாம் குறிக்கும் குறிப்பிற்கு எதிர்ப்பாடுகளைக் கூடியவரை எடுத்துக்காட்டித், தக்க விடைகள் இறுத்துக்கொண்டு செல்வது, ஆராய்ச்சிகளின் உண்மை முடிபினை அண்மையிற் கொணரும் வழியாகும். இங்ஙனமாக, உண்மை முடிபு காணும் நோக்க மொடு செல்லும் ஆராய்ச்சி உரைகளின் இயல்புகளை ஆராய்ச்சி வல்லுநர் உணர்ந்திருத்தலின், ஈண்டு நினைவூட்டும் அளவிற் குறித்து நிறுத்துகின்றோம்.

இம்முறையில் இதுபோது முதன் முதலாக ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளும் பொருள் **வஞ்சிமாநகர்** என்பதாகும். இந்த ஆராய்ச்சி குறித்து முன்னரே பேரறிஞர்களால் அரிய ஆராய்ச்சி நூல், உரைகள் வெளிவந்துள்ளன. ஆயினும், சில திங்களின் முன் நடந்த கீழ் நாட்டுப் பெருங்கூட்டத்தில் திரு. **இராம லிங்கஞ்சேட்டியார்** அவர்களும், வேறு பல புலவர்களும் இப் பொருள்பற்றி மீண்டும் ஆராய்ந்திருத்தலின், இது ஒரு முடிந்த முடிபிற்கு வந்ததொன்றென்று கூறுதற் கில்லை. எனவே, இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தித் தமிழ்ப் பெருமக்க ளெல்லாம் ஒரு ஒற்றுமைக் கருத்துக்கு வந்து உண்மையை நிலை நாட்டுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

கலைச்சொல் லாக்கம்

தமிழ்ப் பொழில் ஆடி, புரட்டாசி மலர்களில், சென்னை மண்டல அரசியலாரது கலைச் சொல் லாக்க முயற்சியைக் குறித்துக் கருத் துரைத்திருந்தோம்.

கலைச் சொற்களைத் தமிழில் ஆக்கும் முறையில் கடைப் பிடிக்க வேண்டிய கோட்பாடுகளைக் குறிப்பிட்டுவிட்டு, 'இப் பொழுது நிறுவப்பெற்றுள்ள கலைச்சொல் லாக்கக் குழு தமிழ்

மொழியில் சொற்களை ஆக்க முயலும் என்பதில் யாம் மிகுதியும் ஐயுறுகின்றோம்.' என்று கூறினோம். எம் ஐயுறவு இப்பொழுது உறுதியாயிற்று.

கலைச் சொல் லாக்கக் குழு இப்பொழுது அரசியலாருக்கு ஒரு அறிக்கை அனுப்பியுள்ளது. அவ் வறிக்கையின் மொழி பெயர்ப்பைப்பிறிதோரிடத்தில்தந்துள்ளோம். தமிழ்மொழிக்கு இடையிடையே நேரும் இடுக்கண்களில் இது ஒன்றென்று நாம் கருதுகின்றோம். அவ் வறிக்கையிற் கண்ட கருத்துக்களெல்லாம் ஒப்பத் தக்கன வல்ல வென்பது எம் உறுதியான எண்ணம். தமிழ்மக்கள் அக்கருத்துக்களை நன்காராய்ந்து, தக்க முறையிற் கிளர்ச்சி செய்து, கலைச்சொற்கள் தமிழில் அமையும் வழியைத் தேடவேண்டுவது இன்றியமையாததாகும்.

நம் சங்கம் இந்த வழியில் தலையிட்டு, வழிகாட்ட எண்ணிச், சில பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. அதன் விரிவெல்லாம் அப்போதைக் கப்போது பொழில் வழியாக வெளிவரும்.

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

சேலம், செவ்வாய்ப் பேட்டைத், தமிழ் நெறி விளக்கப் பதிப்பகத்துத் திரு. ஆ. மாணிக்கம் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பிறிதோரிடத்தில் காண்க.

திரு. மாணிக்கம் அவர்கள் நம் சங்கத்திடத்து வைத்துள்ள அன்புக்குத் தகுதியாக நாம் நன்றி பாராட்டக் கூடுமென்று நாம் கருத முடியாது. சேய்மையி லிருக்கும் அவர் செயல், நம் அருமைத் தமிழ்மொழியிடத்தும், அம்மொழிக்கு அடிமை பூண்டுத் தொண்டாற்றிய தனிப்பெருமகனாகிய வீரத்திரு. ஆ. தா. பன்னீர்ச்செல்வத் திடத்தும், இப் பெருமகனுள்ளிட்ட நன் மக்களைத் துணைக்கொண்டு பழமையாகத் தமிழ்ப்பணி யாற்றி வரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திடத்தும் அவர்கள் வைத்துள்ள பெரும்பற்றின் திறத்தையே விளக்குகின்றது.

திரு. மாணிக்கம் அவர்கட்குக், கரந்தைத் தமிழ்ச் சங்கமே யன்றி, தமிழ் மக்க ளெல்லாருமே நன்றி பாராட்டுங் கடப்பாடு டையர். இந்தக் கடப்பாட்டை நிறைவேற்றும் முறை, தமிழர் ஒவ்வொருவரும், 1. இன்ப வொழுக்கம், 2. பழந் தமிழர் நாகரிகம், 3. மொழி நூலும் தமிழும், என்னும் சுவடிகளைக் குறைந்த விலை யாகிய இரண்டு ரூபாவுக்குப் பெற்றுத், திரு. மாணிக்கம் அவர் களை ஊக்கப்படுத்தியும், இதன்மூலம் நம் சங்கத்துக்கு உதவி யும், தமிழ்த் தொண்டு புரிவதே யாகும்.

ல ல ல ல ல ல

கலைச் சொற்கள்

யாம் தமிழ்ப் பொழில் ஆடி மலரிற் கூறியபடி, திரு. சாமி. வேலாயுதம்பிள்ளை அவர்கள் ஆக்கித் தந்துள்ள கணக்குநூல் சார் பான கலைச்சொற்களின் முதற்பகுதியை இம்மலர்ப் பிறிதோ ரிடத்தில் காணலாம். திரு. பிள்ளை அவர்களது முயற்சியை யாம் பெரிதும் வியந்து பாராட்டுகின்றோம். அறிஞர்கள் இச் சொற்களையும் இனி வெளிவரும் சொற்களையும் கூர்ந்தாய்தல் வேண்டு மென்பது எம் வேண்டுகோள். அங்ஙனம் காய்த லுவத்த லகற்றி ஆராய்ந்து, ஒப்பக் கூடியவற்றை ஒப்பியும், திருத்தி யமைக்க வேண்டியவற்றைக் குறித்துத் திருத்த முறைகளை எடுத்துக் கூறியும் உதவி புரிவார்களாயின், அத் தகைய அறிஞர்க்குத் திரு. பிள்ளையவர்களும், தமிழ் மக்கள் சார்பாக யாமும் பெரிதும் நன்றிக் கடன் பூண்டொழுகுவோம். திரு. பிள்ளை அவர்கட்குக் கலைச் சொல் லாக்க வழியில் பின்னும் ஊக்கமுண்டாகும்.

விண்ணப்பம்.

அன்பரீர்,

நலம். கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய தமிழ்ப்பொழில் இறைவன் திருவருளாலும், தமிழன்பர்களின் பேருதவியினாலும், பதினைந் தாண்டுகளின் மேலாகத் தமிழ்ப்பணி யாற்றி வருகின்றது.

இதன் எதிர்கால வாழ்வு, கட்டுரை வழங்குவோர், இதழன்பர்கள் என்னும் இரு திறத்தினராகிய தமிழன்பர்களின் கையி லிருக்கின்றது.

பல அன்பர்கள், இது எளிய நடையில் எழுதப் பெறவில்லை யென்றும், புதுவதான கருத்துக்கள் (Modern thoughts) இதன்கண் வருவதில்லை யென்றும் குறைகூறித் தமது பொறுப்பைக் கழிக்கின்றனர்.

குறைந்த எண்ணினரே இதழுறுப்பினரா யிருப்பதால், பொழிலை வளனுறச் செய்தற் கியலா திருக்கின்றது. ஆண்டுதோறும் கைப்பொருளை இழந்தும் வருகின்றோம். என்றாலும், சங்கத்தார் ஊக்கந் தளராது தமிழ்ப் பொழிலை வளர்த்து வருவது போற்றத்தகும் செயலா யிருக்கின்றது. அன்பர்கள் பலரும் உறுப்பினராகச் சேர்ந்தும், உறுபொருள் கொடுத்தும், புதுக் கருத்துடைக் கட்டுரைகள் எழுதியும், எவ்வாற்றானும் ஆதரித்து ஊக்குதல் வேண்டப்படுகின்றது.

கட்டுரை வழங்குவோர் நினைவில் வைக்கவேண்டிய செய்திகள் சில வற்றை விளக்க விரும்புகின்றோம்.

1. கட்டுரைகள் தெள்ளத் தெளிந்த தீந்தமிழ் நடையில் விழுமிய பொருளை விளக்கமுற எழுதப்பெற்றன வாதல்வேண்டும்.
2. தமிழ்ப்பொழில் பக்கம் நான்கிற்குமேல் தொடராது கட்டுரை முடிவுபெறவேண்டும். நீண்ட பொருளாயிருக்குமாயின், இக் கூறிய அளவில் முடியும் சிறுபிரிவுகளாய் வகுத்து எழுதப்பெற வேண்டும்.
3. தமிழ்ப்பொழிலில் வெளியிடுதற் கனுப்பப்பெறும் கட்டுரை வேறெந்தத் தாளிலும் வெளிவந்திருக்கவும், வெளிவரவும் கூடாது.

இவையன்றி மற்றொரு விண்ணப்பமும் உண்டு.

சிறந்த முறையில் தமிழ்மொழி, தமிழிலக்கிய இலக்கணம், தமிழ்ப் புலவர் வரலாறு, சுவை மலிந்த தனிப் பாடல்கள், மொழி பெயர்ப்புகள்,

வெளிவரா திருக்கும் அரிய நூல்கள், கலைப் பொருள்கள், புதிய கருத்துரைகள், ஆராய்ச்சி யுரைகள், இவை போல்வன பிறவும் எழுத வல்லவர்களை எழுதுமாறு ஊக்கவேண்டும்; எமக்கும் அவர்களை அறிமுகப்படுத்த வேண்டும்; தத்தமக்குத் தெரிந்த அன்பர்களைப் பொழிலுறுப்பினர்களாகுமாறு தூண்டவும் வேண்டும்.

இவ்வாறான உதவிகள் ஞாலத்தின் மாணப் பெரியனவாய்ச் சங்கத்தாரால் நன்றியுடன் மதிக்கப்பெறும்.

க. த. சங்கம், 10—10—'40.

த. வே. உமாமகேசுவரன், பி.ஏ., பி.எல்.,
பொழிற்றொண்டர்.

கலைச்சொல் லாக்கம்

சென்ற சூன் (June) திங்களில், இந்த மாகாணத்தில் வழங்கும் மொழிகளில், தொழிலியல், அறிவியல் இவற்றுள் வழங்கும் குழூஉக் குறிகளைக் குறிக்கும் சொற்களை ஒரே வரிசையாக அமைத்து நிலைபெறச் செய்வதற்கான பொதுக் கொள்கைகளைத் தேறுவதற்கென, ஒருகுழுவைச் சென்னை அரசியலார் நிறுவினர்கள். அந்தக் குழு இப்பொழுது அரசியலாருக்குத் தம் அறிக்கையை அனுப்பியுள்ளார்கள். அந்த அறிக்கையின் கருத்துப் பின் வருமாறு. அரசியலார், அக் குழுவின் தாங்குரைகளை ஒப்புக்கொண்டு, பொருள்நிலை இடந்தரும் போது, குழுவின் கருத்துப்படியே வேறுபல தனிக் குழுக்களை நிறுவ எண்ணுகின்றனர்.

(a) டில்லி, இந்திய அரசாட்சியின் நடுக் கல்வி அறிவுரைக் குழுவுக்குப், பூனா, பொதுக் கல்வித் துணை நாயகராகிய திரு. பி. என். சீல் என்பவர், 'இந்தியா முழுமைக்கும் வேண்டும் ஒத்த கலைச் சொன்முறைகள்' என்னும் பொருண்மேல் எழுதியனுப்

பிய குறிப்பையும் ; (b) கலைப் பாடமொழியைக் குறித்துத் திரு. ஜி. ஆர். பரஞ்சபி (மும்பாதேவி, அரசகலை நிலையம்) குறிப்பும் ; (c) ஆந்திரப் பல்கலைக் கழகத்து வித்துவான் திரு. ஜி. ஜே. சோமயாஜி குறிப்பும், இந்தக் குழு பார்த்தது.

இப்பொழுது மாணவரும், ஆசிரியரும், சுவடி வெளியிடுவோரும், தேர்வாளர்களும் உணரும் முட்டுப்பாடுகளைக் குறித்தும், ஒவ்வொரு மொழியிலும், மொத்தமாகத் தென்னிந்திய மொழிகளுக்குள்ளேயும், கலைச்சொல் முறைகளைப் பயிற்றுவதிலும், ஒன்றுபடுத்துவதிலும் திறம் பெறுவதற்கான பல முறைகளைக் குறித்தும்நிகழ்ந்த ஆராய்ச்சியில் குழுவுறுப்பினர் எல்லாரும் கலந்து கொண்டார்கள்.

இந்தியா முழுதுமே கூடுமானமட்டும் ஒரே வகையான கலைச்சொல் முறையை வைப்பதற்காக, நடுக்கல்வி அறிவுரைக் குழுவுக்குமுன் இப்பொழுதுள்ள கருத்தினை, இந்தக் குழு மகிழ்வுடன் தெரிந்துகொண்டது. இத்தகைய எல்லா - இந்திய சொன் முறை ஒப்புக் கொள்ளப் பெறுமானல், இந்தக் குழுவினல் போற்றித் தரப்பெறும் இரண்டாந்தரச் சொற்களையே தாக்குவதாகும். இந்தியாவின் மற்றப் பகுதிகளுடன் ஒத்திருக்கவேண்டி நம் பட்டியலை ஒருகாலத்துக்குப் பிறகு திருத்தி, ஏனைய இந்திய மொழிகளோடு ஒப்பவமைக்கக் கூடியதாயிருக்கும்.

மலையாள மொழிக்காகத் திருவனந்தபுரம், கோச்சியிலும், கன்னட மொழிக்காக மைசூரிலும், உருது மொழிக்காக ஐதராபாத்திலும், இந்த முறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளைப் பல தனிக் குழுக்களின் நினைவுக்குக் கொண்டுவரவும் இந்தக் குழு முடிவு செய்கின்றது.

தாங்குரைகள்

தென்னிந்திய மொழிகளில் ஒத்த தொடர்புடைய வகைப்பட்ட தொழிலியல் அறிவியல் கலைச் சொற்களை ஆக்கக்கூடிய கீழ்க் காணும் பொதுக் கொள்கைகளை அரசியலாருக்குத் தெரிவித்துக்கொள்ள இந்தக் குழு முடிவு செய்கின்றது.

(i) கீழிரண்டாந்தர வகுப்புகளில் இப்பொழுது தென்னிந்திய மொழிகளில் வழங்கிவரும் அயன்மொழித் தொழிலியற் கலைச் சொற்களின் நேராய சொற்கள் மிகுதியாக நிலைத்து விட்டன ; கல்வியின் பொருட்டு ஏற்றுக்கொள்ளக் கூடியன. தென்னிந்திய மொழிகளில் வழங்கிவரும், மின்னல், இடி, எதிரொலி, நில அதிர்ச்சி, உலோகம், உறுப்பு, அத்திரி (கோவேறு கழுதை) போன்ற, கண்கூடாய இயற்கைப் பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் குறிக்கும் மற்றச் சொற்களும் ஏற்றுக்கொள்ளப்படலாம். இந்தச் சொற்றொகுதிகள் தென்னிந்திய மொழிகள் ஒவ்வொன்றுக்கும் தனியா யிருக்கலாம்.

(ii) எண் நிலவு அல்லது பண்புப் பெயர்களுக்கும் கருத்துக்களுக்கும் தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் பொதுவாகத் தொழிலியற் கலைச் சொற்களுக்கு ஒரு வகைப்பட்ட பட்டியல் எழுதி முடித்தல் இன்றி யமையாதது; காட்டாக- குணம், இயல், படிப்புப் பாடப் பெயர்கள்:- வலி, மையம், பருமம், ஊட்டம், செயல், எதிர்ச்செயல், உணர்ச்சி, குறுக்கை, நெடுக்கை, இராப்பகல் ஒப்பு, பரப்பு, நீர்மம், திண்மம், நொய்மம், சுழற்சி, இயற்கணிதம், வடிவ கணிதம். இந்தப் பெயர்கள் திராவிட மொழிகளுக்குச் சமஸ்கிருத (வடமொழி) முதலி லிருந்தும், உருது மொழிக்குப் பாரசீக அல்லது அராபிய முதலிலிருந்தும் ஆக்கப்படலாம். இந்தத் தொகுதி கட்டாயமாக சிறிதாகவே இருக்கும். [இந்த வகுப்பில் வரும் தொழிலியற் கலைச் சொற்களுக்கு அவற்றின் ஆங்கில நேர் சொற்களை அடைப்புகளுக்குள் காட்டும் வழக்கத்தை முதலிற் சில ஆண்டுகளுக்கேனும் வைத்துக்கொள்ளலாமென நமது தோழர் திரு. பிசரோடி எண்ணுகிறார்]

(iii) மேலிரண்டு தொகுதிகளிற் சேராத மற்றைய தொழிலியற் கலைச் சொற்கள் அப்படியே ஆங்கிலத்திலிருந்து எடுக்கப் பெற்றுத், தென்னிந்திய எழுத்துக்களில், வேண்டு மிடங்களில்

(278-ஆம் பக்கத்தில் தொடர்கின்றது.)

மாணிக்க வாசகர்

திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்
திருச்சிராப்பள்ளி வானொலியிற் பேசியது.

செந்தமிழ்ப் பாண்டி வளநாட்டிலே, சைவ மணங் கமழுந் திருவாதவூர் என்னும் திரு நகரில், சிவபக்தி மிக்க அந்தணர் குலத்தில் மாணிக்கவாசக அடிகள் தோன்றியருளினார்கள். இவர்களுக்குப் பிள்ளைத் திருப்பெயர் திருவாதவூரர் என்ப தாம். இவர்கள் தோன்றியருளியமையைக் குறித்துக் கடவுண் மாமுனிவர், 'உலகில் மாயப் பொங்கிருளகல, எம்மையாளுடை யான் அன்ப ரிதயத் தாமரைகளெல்லாஞ் செம்மையாய் மலர, ஞானத் தினகரர் உதயஞ் செய்தார்.' என்று சிறப்பித்துப் பாராட்டுவர். திருவாதவூரர் இளம்பருவத்தில் கருவி நூல்கள், அரசியல் நூல்கள், சமயநூல்கள் முதலியவற்றை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்த அறிவுடையராக விளங்கினர். அக் காலத்து மதுரையிலிருந்து தமிழ்நாடு புரந்த அரிமர்த்தன பாண்டியன் இவர்கள் அறிவின் மாண்பை யுணர்ந்து, அழைத்துத், தன் அரசியல் நடாத்துதற்குரிய அமைச்சருள் தலைவராக்கினன். இவர்கள் மதிநுட்பம் நூலோடுடையராய், அமைச்சருள் தலைவராக வீற்றிருந்து, அறநிலை பேணித், தம் செயலாற்று நாளில், 'நானார், என்னுள்ளமார், ஞானங்களார்' என்று இன்னோரன்ன தத்துவ ஆராய்ச்சியில் தலைப்பட்டு, இருவினைக் கீடாகப் பிறந்து இறந் துழலும் உயிர்த் தொகுதிகளினியல்பும், அவ்வுயிர்களை வினைப் பயன் நுகர்வித்து அருள் புரியும் பரங்கருணைத் தடங்கடலாகிய இறைவ னியல்பும், அவ் விறைவனை யுணர்ந்து இன்பம் எய்தற் குத் தடையாகவுள்ள பாசப் பொருள்களினியல்பும் உள்ளவா றுணர்ந்து தெளிவெய்தினர். இந் நிலையில் அடிகள், 'கூத்தினர் தன்மை வேறுகோலம் வேறாகுமாறுபோல்', பாண்டியன் இட்ட பணியைப் புறத்தே மேற்கொண்டும், அகத்தே பற்றற்றும், சிவபக்தியில் ஈடுபட்டு ஒழுகுவாராயினர்.

அந் நாளில், பாண்டியற்குக் குதிரை வாங்கப் பொன் கொண்டு சென்றவர், திருப்பெருந்துறையில் குருந்த மரத்து நீழலில் இவர் 'பந்தமறும் எல்லையது பார்த்தினிதிருந்த' சிவ பரம் பொருளாகிய குருபரனைத் தரிசித்து, உள்ளங் கரைந்து, உலகியலை மறந்து, 'உன்னடி யடைந்து நாயேன் உறுபவம் ஒழித்தல்வேண்டும்' 'என்னுயிர்க் கிறைவா' என்று முன்னுற வணங்கி நின்றார். இவர் அதிதீவிர பக்குவ நிலையைக் கண்டு பெருமான் அருள்கூர்ந்து, சிவஞான போத மென்னுஞ் சைவத் தலைநூலின் நுண்பொருள்களைத் தெளிவுறுத்தியபின், 'இருவினைப் பாசமும் மலக்கல் லார்த்தலின், வருபவக் கடலின்வீழ் மாக்க ளேறிட, அருளுமெய் யஞ்செழுத்தை' அநுபவ நிலையில் உபதேசித் தருளினர். இங்ஙனம் குருபரன்பா லுணர்ந்த தம் அநுபவத்தையே, 'நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம வெனப்பெற்றேன்' என்று அடிகள் திருவாய் மலர்ந்தருளினர்.

இவ்வாறாகப் பாண்டியன் பொருட்டுக் குதிரை வாங்கப் போனவர், கொண்ணுறு பரி கொளாமல் கோவணங் கொண்ட செய்தியைப் பாண்டியன் கேட்டு, ஓலைபோக்கி, அடிகளை அழைப்பித்துத் துன்புறுத்திஞைக, அடிகள் தஞ்செய லற்று எல்லாம் இறை செயலாகக் கண்டிருப்பவராதலின், அவ்விறை நினைவில் ஈடுபட்டிருந்தனர். பின்னர் இவர் பொருட்டு இறைவன் நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்தும், மண் சுமந்தும், பிரம்படி யுண்டும், அடிகள் பால் தாங்கொண்ட அருட்டிறத்தை உலகுக்கு விளக்கி யருளினர். அடிகள் திருவருளமிர்தத்தை நிறைய வுண்டு, சிவாநுபவச் செல்வராக விளங்கிய நிலையில், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற முதுமொழிப்படி, தம் அருளநுபவத்தை உலகத்துள்ள மக்களுக்கெல்லாம் வழங்க ஆண்டவன் அருள்வழி நினைந்து, **திருவாசகம்** என்னும் இசைப்பாடற் றொகுதியைத் திருவாய் மலர்ந்தருளினர்.

உலகப் பற்றை முழுதும் துறந்த உத்தமச் சிவஞானச் செல்வர், தமக்கு இறைவன் அருளிய ஒப்புயர்வில்லாப் பேரின்ப நிலையைத் தாம் அநுபவித்த அளவில் நின்றுவிடாது, உலகத்து

மக்களுக்கெல்லாம் உபகரிக்க நினைந்தது பெரிதும் பாராட்டத் தக்கது. இல்வாழ்வார்க்கு அன்பென்னும் அருங் குணமும், துறவற வாழ்க்கை யுடையார்க்கு அருளென்னும் பெருங் குணமும் சிறப்பாக இருத்தல் வேண்டும் என்பர் **திருக்குறளாசிரியர். மாணிக்கவாசகப் பெருமான்** இவ் விரு பெருங் குணங் களுக்கும் நிலைக்களமாக விளங்கிய பெரியராவர்.

இவர் மேற்கொண்ட நெறி, சரியை, கிரியை, யோகங்களுக்கு மேலான ஞான நெறியாகிய சன்மார்க்க மாகும். இந் நெறியில் நின்ற அடிகள், காணப்படும் இவ்வுலக இயல்புகளைத் தம் கூர்த்த மதியா லுய்த்துணர்ந்து, பருப் பொருளாகிய மாயா காரியங்களெல்லாம் தத்தங் கால வெல்லையில் அழிந்தழிந்து தேய்ந்தொழிவன என்னும் உண்மையையும், இவ் வெல்லாவற் றையும் கன்மங்களுக் கீடாகப் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடும் பேராற்றல் வாய்ந்து காலவெல்லையைக் கடந்து நிற்கும் கடவுள் ஒருவருளர் என்பதையும், அப்பெருமான் சார்ந் தார்க்குத் தண்ணிழலாய்ப் பேரின்ப வடிவாகத் திகழும் இயல் பினர் என்பதையும், உள்ளவா றுணர்ந்து, அப் பெரும்பெயர்க் கடவுள் உபதேசத்தால், தாம் எய்திய பேரானந்தப் பெருஞ் செல்வத்தைத் தம் சோதரராகிய மக்களெல்லோரும் துய்க்க வேண்டுமென்னும் பேரருளுடையராய்த் **திருவாசகம்** என்னும் தெளிதேனைப் பொழியும் அருண் முகிலாயினர்.

திருவாசகப் பாடல்கள் **மாணிக்க வாசக அடிக**ளுடைய சிவானுபவ நிறைவில் பொங்கித் ததும்பி வெளிப்பட்ட அமுத வெள்ள மெனின் மிகையாகாது. பிற்காலத்துச் சிவயோக நெறி நின்று இறையருளநுபவத்தி லீடுபட்டு ஒழுகிய **தாயுமான அடிகள்,** 'என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து, அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே.' என்று கூறிய தற்கு இலக்கியமாக வுள்ளவர் **மாணிக்க வாசக அடிகளே.** இவர்கள் அன்பு நெறியை வியந்தே, 'வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்ப தென்நாளோ.' என்றுங் கூறினர். படிப்பவர் கேட் புவர் உள்ளங்களைக் கனிவிக்கும் கவிமழை பொழிந்த சமீப

காலத்துக் கவிஞர் தலைமணியாகிய **இராமலிங்க அடிகள்** திருவாசகத்தைப் பன்முறையோதி யுணர்ந்து பயின்றவர் என்பது அவர் அநுபவப் பாடல்களால் அறியலாம். ஒரு சிறந்த கவியி னுள்ளத்தை மற்றொரு கவிதான் உணரமுடியும். அந்நிலையில், **திருவாசகப்** பாடல்களில் உள்ளந் தோய்ந்து, பொருள் நயங்களில் ஈடுபட்ட **இராமலிங்க அடிகள்**, 'வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை, நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே, தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.' என்று கூறினர். நான் கலந்து பாடுங்கால் என்றது நினைக்கத் தக்கது. ஒரு பெரியார் பாடலைப் படிப்பவர்கள் உள்ளமும், அப்பாடற் பொருளும் அத்துவித நிலை யடைதல்வேண்டும். அங்ஙனம் ஒன்றுபடுதலையே, 'நான்கலந்து பாடுங்கால்' என்றனர். **திருவாசகச்** சுவை 'ஊன்கலந்து உயிர்கலந்து' என்றார். உயிரிற் கலந்து தன்வய மாக்குங் கனிவு **திருவாசகத்**துக்குச் சிறப்பியல்பாகும். தேன், பால் முதலிய உவமைகளா னன்றித் **திருவாசகச்** சுவையி னியல்பை உள்ளபடி கூறுக என்பார்க்கு விடையாக, 'காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற, ஏமமிகும் கற்புடையாள் இன்பினும் இன்பாயது.' என்று, சொல்லொணுமையைக் குறிப்பிட்டார். இதற்குமேல் அவ் வநுபவச் சுவையை எடுத்துக் கூறுதற்கு எங்ஙனம் இயலும்!

திருவாசகத் திருப்பாடல்களை ஔடவ ராகமாகிய மோகனத்திற் பொருளுணர்ந்து பாடுவராயின், கல்நெஞ்சமுங் கரையும். '**திருவாசகத்**துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்.' என்னும் மூதுரையும் இதுபற்றி யெழுந்ததே. கவிஞர் பெருமானுகிய **சிவப்பிரகாச அடிகள்**, 'வாதவூரன்பர் மலர்வாய்ப் பிறந்த, திருவா சகமிங் கொருகா லோதில், கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள், தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய, அன்பராகுந ரன்றி, மன்பதை யுலகில் மற்றையோ ரிலரே.' என்று தம் ஆராமையை வெளிப்படுத்தினர். இன்பக் கலைகளுள் ஒன்று இசை யென்பர் அறிவுடையார். அவ் விசைக்குக் கொழுகொம்பு போல ஆதாரமாக நிற்பது இசைப்பாடல்களாகும். சுவை

நணிந்த பாடல்களிலன்றி இசையின் பெருமையை உணர்தல் இயலாது. இசை பாடுபவன் சுவைகளை அநுபவித்துத் தன் உட்கோளைப் புலப்படுத்துதற்குச் சிறந்த பாடல்களே பற்றுக் கோடாகும். 'வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார் வெண் காடு மேவிய விகிர்தனுரே.' என்னும் தமிழ் மறையில் யாழி சைக்கு வேதப் பாடல்கள் பற்றுக்கோடாக விளங்கின என்பது புலனும். தமிழ் நாட்டில் இசைக்கலை வளர்ச்சியடைந்த காலம் தேவார திருவாசக காலம் என்பது யாவர்க்கும் உடன்பா டாகும். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம் பந்தன்' என்றும், 'கானத்தின் எழுபிறப்பு' என்றும், திரு ஞான சம்பந்தர் பெருமை கூறப்படுகிறது. திருவாசகப் பாடல்களின் சொற்களையும் எழுத்துக்களையும் சுரநிலங்களில் அமைத்துப் பாடினுல், சுரங்களுக்குப் பாடல் அமைந்ததோ, பாடல்களுக்குச் சுரம் அமைந்ததோ என்று இசைவல்லார் பெரு வியப்பெய்துவர். பிறவிப் பிணிக்குச் சார்ந்த மருந்தாக வுள்ள அரும்பொருள்களைப் பாடல்களில் அமைத்து இசை யாகிய அநுபானத்தோடு ஊட்டுதற்கு முற்பட்டவர் மணிவாச கப் பெருந்தகை யாவர். இவர்கள் பற்பல சிவதலங்களுக்குஞ் சென்று, ஆங்காங்குக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை உள்ளத் தமைத்துப் பாடும் முகமாகத் தம் அநுபவ உணர்வை அன்பர்களுக்குத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சில இடங்களில் மாத்திரம் உள்ளதாகக் கொண்டு பாடியது பொருந்துமோ எனின், ஒரு பசுவின் உடல் முழுதும் பால் பரவியிருப்பினும், அது தோன்று தற்குரிய உறுப்பினன்றிப் பிறிதிடத்து வெளிப்படாதவாறு போல, மக்கள் வழிபாட்டிற் கிரங்கி அருள்புரிதற்கு அருட்குறி களின் முகமாக ஆண்டவன் வெளிப்பட்டு அருளுவர். இவ் வுணர்ச்சி மேற்கொண்டே, 'பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே' என்னும் திருப் பாட்டின் இம் முற்பகுதியில் இறைவனுடைய எங்குநிறை இயல் பைக் கூறிப், பிற்பகுதியில் 'சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே! திருப்பெருந் துறையுறை சிவனே!' என்று தம் மகத் தும் சிவ தலத்தும் வெளிப்படும் உண்மையைப் புலப்படுத்தி

யுள்ளார். இங்கே எங்குநிறை நிலையில் ஒளிப்பரப்பாகவும், உள்ளத்தில் இனிக்குந் தேனாகவும், திருக்கோயிலில் மங்கலகரமான மூர்த்தியாகவும் பெருமான் விளங்குவர் என்னும் பொருணயம் நினைந்து இன்புறத் தக்கது.

ஆண்டவன் அமைப்பாகிய அன்பு, அருள், அறிவு முதலிய அரியகுணங்களில் ஈடுபடுதலன்றி, மக்களமைப்புகளாகிய சாதி, குலம், பிறப்பு, பொருள் முதலியவை பற்றிய உயர்வு தாழ்வுகளைச் சிறிதும் நம் மணிவாசகனார் கருதியவரல்லர். இவ்வுண்மையைப் புலப்படுத்துதற்கே, 'சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும், ஆதமிலி நாயேன்' என்று தம் முற்பட்ட இயல்பையும், 'குலங் களைந்தாய் களைந்தாய் என்னைக் குற்றம்' என்று இறைவனுக்குத் தாம் ஆளாய பிற்பட்ட இயல்பையும் கூறுவாராயினர். மக்களுக்குக் குலப் பெருமை பேசுதல் இயல்பென்பதும், அதனால் உண்டாஞ் செருக்கு ஒழியின், அது மூலமாக உண்டாம் எல்லாக் குற்றங்களும் நீங்கிவிடும் என்பதும் அவர்கள் கண்ட உண்மைகளாம். உடல், பொருள், ஆவி மூன்றனையும் இறைவனுக் குரிய பொருள்களாகக் கொடுத்து, அவற்றில் ஒரு சிறிதும் பற்றின்றி ஒழுகுதலை மேற்கொண்டனராதலின், அவற்றால் ஏதும் இடர்ப்பாடு அடைந்திலர் என்பது விளங்கும்.

ஒருவன் எவ்வெப் பொருள்களிற் பற்றொழிந்திருக்கின்றானோ, அவ்வப் பொருள்களால் வருந் துன்பத்திற்கு ஆளாகான் என்பது பெரியவர்கள் கண்ட உண்மை. அடிகள் விருப்பு, வெறுப்பற்ற நிலையில் நின்றாராயினும், மக்கள்பாலுள்ள சோதர உரிமையை விட்டவரல்லர். அதற்குக் காரணம் அன்னாரெல்லாம் தாம் பெற்ற பேரின்பப் பெருவாழ்வில் தலைப்படவேண்டுமென்னும் கருணையே யாகும். இவ்வருளறத்தை மேற்கொண்டே, 'காலமுண்டாகவே காதல்செய் துய்ம்மின்' என்றும், 'மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' என்றும், 'முதுலகுந் தருவான் கொடையே வந்து முந்துமினே' என்றும், உலகத்தவரை நோக்கி அருளமுதத்தை உடனுண்ண அழைப்

பாராயினர். அவர் அன்புடன் விடுத்த அழைப்பிற் கிணங்கி வாராத மடவோரை, உலக நிலையாமையை யுணர்த்தி, அஞ்சு வித்தாயினும் அழைத்து ஊட்டவேண்டு மென்னும் அருள் நிறைவால், 'நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோ மினி நாம் செல்வோமே.' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இனி, அடிகள் உலகியலைக் கடந்த நிலையில் நின்று, மாற்ற மனங் கழிய நின்ற மறையோனாகிய இறைவன் அருள் வெள்ளத்துள் மூழ்கிப், பேரின்ப நிலையில் தலைப்பட்டு அநுபவித்த உண்மைகளெல்லாம் மனம் வாக்குக்களுக்கு அடங்காதனவாகவும், அவற்றைப் பதிகரணமாக மாறப்பெற்ற தம் உள்ளத்தால் அறுதியிட்டுத், தெள்ளமுத உரைகளால் அறிவிற் சிறியாரும் உணர்ந்து இன்புறும் வண்ணம் இசை யினிமை மிக்க பாடல் வடிவில் வெளிப்படுத்திய முறை மிகவும் பாராட்டற் குரியது. அம்மானை, பொற்சுண்ண மிடித்தல், உந்தி, சாழல், தெள்ளேணம், ஊசல் முதலிய மகளிர் விளையாடல்களில், அவர் தம்முள் உரையாடு முகமாக, அரிய அநுபவ உண்மைகளை எளிய முறையில் தெளிவு படுத்தியது, அடிகள் ஏனைய மக்கள்பால் வைத்த பெருங் கருணைக்குப் பெரிதும் சான்றாவதாம். குயிலை முன்னிலைப்படுத்தி இறைவன் அருட்குணங்களை இங்ஙனம் கூவுக எனவும், வண்டுகளை நோக்கி இங்ஙனம் ஊதுக எனவும், அருளிச் செய்த திருப்பாடல்களை நோக்குங்கால், ஓசை யொலி யெலாம் சிவமயமாகக் கண்டார் என்பது புலனாம். தாம் அநுபவித்த பொருள்களின் வரையறையும், தெளிவும், குழைந்த அன்பின் கனிவும் ததும்ப, இடையறாது ஒழுகும் தேனருவிபோன்ற ஒழுக்கமிக்க இவர்கள் பாடல்களின் இயல்பை நம்மனோர் எங்ஙனம் எடுத்துரைக்க இயலும்! ஆயினும், இவற்றிற்கெல்லாம் எடுத்துக் காட்டாக, சிறிய வடிவி லமைந்த ஒரு திருப்பாடலைக் குறிப்பிடலாம் என்று எண்ணுகின்றேன். அஃதாவது,

> இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றும்
> துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
> சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
> ஊராகக் கொண்டா னுவந்து.

என்பதாம். சுவை மிக்க அமிர்தத்தைப் பெய்து வைத்தற்குரிய

கலத்தில் அவ் வமிர்தத்திற்கு மாறுபட்ட பொருள் இருத்த லாகாது. இருக்குமாயின், முதலில் அதனை அறவே யொழித்து விடவேண்டும். பின்னர் அக் கலத்தை உரிய கருவிகொண்டு அழுக்கொழித்துத் தூய்மைப் படுத்தவேண்டும். அதன்பின் நல் லமிர்தத்தைப் பெய்துவைத்தல் முறையாம். இஃது உலகியலிற் கண்டது. இவ் வுண்மையை நினைவு கூர்ந்து அடிகள் இத் திருப்பாடலில் ஓர் அரிய அநுபவத்தை வெளியிடுவாராயினர். இறைவனார் தம் அருளமிர்தத்தை அடிகள் உள்ளமாகிய கொள் கலத்தில் பெய்து வைக்கத் திருவுளங்கொண்டு, அதன்கண் நீண்ட காலமாக ஈட்டப்பட்டு நிறைத்துவைத்த மாயா காரியப் பொருள்களா லாகிய துன்பங்களை அறவே யொழித்துப், பின் மயக்க உருவமாகப் படிந்து கிடந்த இருளைத் தன் அருட்பார்வை யொளியாற் போக்கிப், பேரின்ப மயமாகிய அருளமிர்தத்தைப் பெய்து இன்புறுத்தினு ரென்பதும், அந்நிலையில் அடிகள் உள்ள முழுதும் அன்பு மயமான குளிர்ந்த இடமாக, அதன்கட் பெரு மான் வீற்றிருந்தருளின ரென்பதும், இதன்கட் புலனும்படி, 'சோதியாய் நின்று, இருளகற்றித், துன்பந்தொடர்வறுத்து, இன்பம் பெருக்கி, அன்பமைத்து, என்னுடைய சிந்தையே ஊராகக்கொண்டான்' என நிரனிறைப் பொருள் கோளாக, அழகுபொருந்தத் திருவாய் மலர்ந்தருளினர்.

இங்ஙனம் **மாணிக்கவாசக அடிகள்** நம்மனோர் உய்யும் பொருட்டுத் தாம் அநுபவித்த சிவாநந்தத் தெள்ளமுதைச், சொல்லினிமை பொருளினிமைகளிற் சிறந்த பாடல் வடிவில், வெளிப்படுத் தருளிய பேருபகாரத்தை நினைவு கூர்தற்கு அறி குறியாக நாம் மேற்கொள்ளத் தக்கது, அப் பாடல்களை இசை நலம் பொருந்த மெய்யன்பொடு ஓதியும், உண்மைப் பொருள் களை யுணர்ந்தும் இன்புறுதலே யாம். அன்பே சிவம் எனும் அரிய பொருளுரை மக்கள் உள்ளத்தில் நிலவுவ.தாக!

கலைச்சொல்லாக்கம்

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., ஜயன்பேட்டை.

(முற்றொடர்ச்சி: துணர் கஉ, மலர் ந, பக்கம் 103)

முதற்பகுதி

கலைச்சொல் விளக்கம்.

Mathematics—கணிதம்.

1. Abscissa என்பது X axis (கவ்வாயம்) எனுந் தரை மட்டமான ஆயத்தையும், Ordinate என்பது Y axis (ஙவ்வாயம்) எனுஞ் செங்குத்தான ஆயத்தையுங் குறிப்பன. எனவே, இவை முறையே மட்டாயம் அல்லது கவ்வாயம், குத்தாயம் அல்லது ஙவ்வாயம் எனப் பெயரிடப்படுவன.

குறிப்பு-X, Y, Z எனும் ஆங்கிலக் குறியீடுகளை முறையே க, ங, ச எனுந் தமிழ்க் குறியீடுகளாலும்; a, b, c, d, e, f முதலியவற்றை அ, இ, உ, எ, ஐ, ஒ முதலியவற்றாலும்; α, β, γ முதலியவற்றை ஆ, ஈ, ஊ முதலியவற்றாலும்; θ வைத் 'தீ' யாலுங் குறித்தல் எளிதும் ஒலியிசைக்கு (Euphony)ப் பொருந்தியது. மாகும். A, B, C, D, E, F முதலியவற்றை அ̂, இ̂, உ̂, எ̂, ஐ̂, ஒ̂ எனக் குறித்தலும், இவற்றைக் கோண அ, கோண இ முதலியனவாகப் படித்தலும் முறையாம்.

2. Algebra என்பது எண்* கணிதத்தின் (Arithmetic) இயல்புகளைத் தொகுத்தும், வகுத்தும், முறைப்படுத்தியும், இவ்வாறு இயற்படுத்தி விரித்துக் கூறும் நூலாதலின், இயற் கணிதமெனப்

* 'எண்' ஆன்றோ ராட்சி யுடையது; 'எண்ணு மெழுத்துங் கண் ணெனத் தகும்'; 'இலக்கம்' எனுஞ் சொல்லினுஞ் சுருங்கியது.

பட்டது.* இவ்வாறே Geometry வடிவங்களின் இயல்புகளையும், Trigonometry கோணங்களின் இயல்புகளையும் விரித்துக் கூறுவதால், முறையே வடிவ கணிதம், கோண கணிதமெனப் பெயரிடப்பட்டன. இவை யாவும் Mathematics எனுங் கணிதத்தின் பாலடங்கும்.

3. Algebraical symbol - இயற்கணிதக் குறியீடு. குறியிடு எனும் ஏவல் வினைச் (Imperative) சொல்லிலிருந்து குறியீடு எனுங் காரணப் பெயர் (Abstract noun) ஈற்றயல் மிகுவதால் பிறக்கலாயிற்று. இவ்வாறே அண்ணளவிடு, கணக்கிடு, நிரலிடு முதலிய சொற்களிலிருந்து முறையே அண்ணளவீடு (Approximation), கணக்கீடு (Calculation), நிரலீடு (Tabulation) முதலியன பிறந்திருக்கின்றன. [இடு = வை; ஈடு = வைக்கப்படுவது]

4. Angle-meter—கோண அளவி. இதன் இனச் சொற்களும் (Contiguous terms) அவற்றிற் கேற்ற தமிழ்ச் சொற்களும்:

Clinometer—**சரிவளவி (கோண அளவி)**
Goniometer—**கோணளவி** †
Protractor—**கோணளவி**
Sextant (*see* Phyhics)—**விண் கோணளவி (கோணக்கோல்)**
Theodolite—**திலக்கோணளவி**

இவ் வாங்கிலச் சொற்களின் வேறுபாட்டிற் கிசைய சில தமிழ்ப் பெயர்கள் திருத்தி யிடப்பெற்றிருக்கின்றன. கவிப்புகளுக்குள் ளிருப்பன கலைச் சொற்கள் எனும் நூலுள் பிழைபட இருப்பன ; இக் கருவிகளின் பயனையும் ஆங்கிலப் பெயரின் அடியங்களையும் (Roots) உற்று நோக்கின், இத் திருத்தங்களின் இன்றியமையாமையும் ஏற்புடைமையும் நன்கு விளங்கும். இவ்வாறே இனி வருந் திருத்தங்களுக்குங் கொள்க.

---

* இவ்வாறு இச் சொல் பீஜ கணிதம், வீச கணித மெனுஞ் சொற்களினும் ஆழமுடைத்தாதல் கண்டுகொள்க.

† இவ்வாறு பல ஆங்கிலச் சொற்களுந் தமிழ்ச் சொற்களும் ஒத்திசைப்பதைக் கண்டு மகிழ்க.

இக் கருவிப் பெயர்களின் ஈற்றிகரம் கருவிப் பொருள் விகுதி யாகும். இவ்வாறு இகரம் கருவிப் பொருளைக் குறிப் பதை, Air pump-வளிவாங்கி, Barometer-பாரமானி, Baroscope-பாரங் காட்டி, Binocular-இணைநோக்கி என்பனவாகிய பூதநூற் சொற்களுள்ளுங் கண்டு கொள்க. இக் கூட்டுச்சொற்களுள், ஈற்றுச் சொற்களாய அளவி, வாங்கி, மானி, காட்டி, நோக்கி முதலியவற்றின் பகுதிகள் அவ்வக் கருவிகளின் செயல் வகையை நன்றாக விளக்கிக் குறிப்பனவாகும்.

5. Anti-clockwise - இடஞ்(சுழி) ஆக. ஈண்டும் இத்தகைய பின் வருஞ் சொற்களுள்ளும் கவிப்புகளுக்குள் ளுள்ளவை விரித்துக் கூறும்பொழுது பயன்படுத்தவும், பழக்கத்திற்கு வந்து சுருக்கிக் கூறும்பொழுது விடப்படவுமாகும்.

6. Anti-logarithm-இனமடக்கை. ஒரு எண்ணின் Logarithm என்பது பத்தை எத்தனை முறை மடித்துப் பெருக்கினால் கொடுபட்ட எண் வருமெனப் பார்ப்பது; அதாவது எந்த எண்ணையும் பத்தின் படியாகக் கூறுவது. உதாரணமாக, 100இன் மடக்கை 2-ஆகும் ($10^2=100$). இதற்கு மாறாக வுள்ளதை **மாற்று மடக்கை** எனப் பெயரிடல் ஏற்புடைத் தாகும். அதாவது 2இன் மாற்று மடக்கை 100 ஆகும்.

7. Approximate-அணித்தான. அண்மையி லிருப்ப தாதலின், அணித்தான அளவு (Approximate value) அண்ணள வெனச் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது.

8. Arc-Major, Minor-முதிர்வில், முதிராவில். Majority முதிர்ச்சியையும், Minority முதிராமையையுங் குறிப்பனவாகலின், பரு, குறு வென்பன ஒப்புமைச் சொற்கள் (Relative terms). முதிர் வில்லிலேயே பருவில்லுங் குறுவில்லு மிருக்கின்றன வாதலின், அவை ஏற்புடையன வல்ல.

9. Argument of a function -சார்பின் மாறு எண். Function of x என்பது xஐச் சார்ந்து பிறப்பவை யாதலின், xஇன் சார்பு எனப்பட்டது.

10. As (::)-போல (பொருத்தக் குறி). x: y :: 3: 4 என்பதை க : ச : : 3 : 4 எனத் தமிழ்ப் படுத்தி எழுதி, கவ்வுக்குச் ச மூன்றிற்கு நான்கைப் போல என் வாசித்தல் எளிதாகும். (Is to=கு). க: ச என்பது கவ்வுக்குஞ் சவ்வுக்கும் உள்ள தகவு (Ratio) அல்லது தகுதிப்பாடு அல்லது ஒப்புமை (relation) ஆகும். இதனைச் சுருக்கிக் கவ்வுக்குச் ச எனப்பட்டது; இக்குறியும் (:) தகவுக்குறி யெனப்பட்டது. க: ச எனுந் தகவைப் போலவே 3: 4 எனுந் தகவிருப்பதால், கவ்வுக்குச் ச 3க்கு 4ஐப் போல எனப்பட்டது; இக்குறியும் (: :) பொருத்தக் குறி (போன் றிருப்பதைக் குறிக்குங் குறி) எனப்பட்டது.

11. Axis-அச்சு, ஆயம். இவ் வாங்கிலச் சொல் இருபொரு ளுடைத்து. சுழலும் பொருளின் மையக் கோட்டைக் குறிக்கும் பொழுது (*viz.* Axis of the earth) அச்சு எனவும், அளப்பதற்கு அடிப் படைக்கோட்டைக் குறிக்கும் பொழுது (*viz.* 5 inches from the x or y axis) இது ஆயம் எனவும் பட்டது.

Axis-major, Axis-minor எனும் இரு அச்சுக்களுள் நீண்டது நெட்டச்சுஎனவுங் குறுகியது குற்றச்சு எனவும் பட்டது.

12. Bi-lateral (*n*)-இருசிறையி. இது இருகோடுகள் அல்லது வரைகளா லாய ஓர் வரைப்படம் (figure) ஆகும். இவ் விரு வரை களும் அவற்றிற் குள்ளிருக்கும் இடத்தைச் சிறை செய்வதால் சிறைகள் எனவும், சிறைகளையுடைய அவ் வரைப்படம் சிறையி எனவும் பட்டன. ஈற்று இகரம் ஈண்டு உடைமைப் பொருளைக் குறிக்கிறது. இவ்வாறே முச்சிறையி (Triangle), நாற்சிறையி (Quadrilateral) முதலியவற்றையுங் கொள்க. இச் சிறையிகளே கோணங்களின் எண்ணிக்கையால் பெயர் பெறும்பொழுது, முக்கோணம், நாற்கோணம் முதலிய பெயரை அடைகின்றன.

Bilateral, Trilateral முதலிய சொற்கள் பெயரெச்சமாகப் பயன்படும் பொழுது இருசிறையிய, முச்சிறையிய முதலிய பெயர்களை அடைகின்றன,

13. Binomial -இருவுறுப்புகள் சேர்ந்து உண்டாவதால் ஈருறுப்புச் சேர்ப்பு அல்லது ஈருறுப்பி யெனவும், Trinomial,......... multinomial முதலியன மூன்று........பல்லுறுப்பி எனவும் படுகின்றன. ஒருறுப்பே வரும்பொழுது சேர்க்கை யின்மையின் monomial ஓருறுப்பிய எனப்பட்டது.

14. Bi-quadratic நான்குபடியை யுடைமையையும், Quadratic இருபடியை யுடைமையையுமே குறிப்பதால் முறையே நாற்படிய, இருபடிய எனப்பட்டன.

15. Bracket -அடைப்பு. இதன் வகைகளையும், Vinculum (தொகுப்புக்கோடு) முதலியவற்றையும் பயன்படுத்தித் தமிழில் வாசிக்கு முறையைப் பின்னர்க் காட்டுதும்.

16. Case-உறுவல். வறுக்கப்படுவது வறுகல் என வழங்கப் படுதல்போல ஒன்றிலிருந்து உறப்படுவது (பெறப்படுவது) உறுவல் என்றுயிற்று. ஈண்டு அல் விகுதி பொருண்மையையும், பகுதி அவ்வவ்வினை முதலையும் (வறு, உறு) குறிக்கின்றன. எனவே இவை வினையடியாகப் பிறந்த பொருட் பெயர்.

17. Centi-meter- கீழ் நூற்றுக்கோல். எண் சுவடியில் fractions கீழ்வாயிலக்கம் எனப்படுதலின் பத்தாகப் பகுக்கப் பட்டது கீழ்ப்பத்து (Deci) எனவும், நூறுகப் பகுக்கப்பட்டது கீழ்நூற்று (Centi) எனவும், ஆயிரமாகப் பகுக்கப்பட்டது கீழாயிரம் (Milli) எனவும் அழைக்கப்படுகின்றன.

Meter என்பது உலகத்தையே அளந்து அதன் பகுதியாகச் சீர்ப்படுத்தப்பட்ட ஓர் அளவு கோலாதலின், சீர்கோல் எனவும், அது கூட்டுச் சொற்களில் (Compounds) சுருங்கிக் கோலெனவும் வருகின்றது. இவ்வாறு சுருங்கி வருபவற்றை ஏனைய விடங்களிலுங் கண்டு கொள்க.

18. Coefficient-பக்கத்திருந்து திறமைப்படுத்துவது எனும் நீண்டதொரு பொருளைக் கெழு எனுஞ் சிறுசொல் விளங்கக் குறிக்கின்றது. இதனை 'அன்பு கெழுமிய ஐய', 'கெழுதகை நண்ப' எனும் புலவர் வழக்கில் காண்க. இத்தகை சிறு சொற்களே தமிழ்த் தன்மையாய சுருக்கம், இனிமை, ஆழம் முதலிய அறிவியற் பண்புகளை நிறம்பப்பெற்றிருத்தலின், இயல் நூற்களிற் பயன் படுத்தற்குரிய வாய்ப்பு மிக்குடையனவாகும்.

(தொடரும்.)

யானை வேட்டுவன்

திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ.,
வரலாற்றாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மக்களின் உளப் பாங்கையும், நாகரிக நிலையையும் காட்டுவது, அவர்தம் எண்ணத்தின் எழுச்சியே எனில் மறுப்பாரிலர். அத்தகைய உயரிய எண்ணங்கள் பண்பட்ட உளத்திற்றோன்றுதல் இயல்பாதலானும், அவ் வுளப் பண்பும் கல்வி, கேள்வி,உணர்ச்சிகளால் உண்டாதலானும், உயரிய எண்ணங்கள் ஒரு மக்களின் நாகரிகத்தை நீட்டி அளக்கும் கோலெனப்பட்டன. எண்ணங்கள் எத்துணை உயர்வுடையவா யிருப்பினும், அவை செயலில் வரும்பொழுதே அவற்றின் பெருமை புலப்படும். அங்ஙனம் எண்ணங்கள் தொழிற்படுதற்கு அவற்றின் உயர்விற் கேற்ற முயற்சி வேண்டும். எண்ணத்தின் அளவுக் கேற்ற முயற்சி இல்லையெனில், கைகூடுவ தொன்றுமில்லையாம். அதையே, சுந்தரரும், 'முயல்பவர் பின்சென்று முயல்வலை யானைபடு' மென்று நினைத்தல் என்றார். யானையைப் பிடிக்க வேண்டுமெனும் உயரிய ஆவலை யுடையான் ஒருவன், அதற்கெனத் தான் முயலுவதுமின்றி, முயல்பவர் பின் சென்று, சிறிய முயல்வலையில் யானையைப் பிடிக்கலாமென நினைப்பின், அச்செயல் நகைக்கத் தகுமன்றோ? எனவே, உயரிய எண்ணமும், அதற்கேற்ற முயற்சியும் உடையாரே பெருமைசால் செயல்களைச் செய்து முடிப்பர் என்பது பெறப்பட்டது.

இக் கருத்தையே இக் குறிப்பின் றலைப்பு அடக்கி நிற்கின்றது. பண்டைத் தமிழகத்தில் நிறைமொழி மாந்தராய்ச் சிறந்தாருள் ஒருவனான **கோப்பெருஞ் சோழனின்** திருமொழி இச் சொற்றொடராம். கால இடமெனும் கட்டுப் பாடுகளைக் கடந்து நிற்கும் தலையாய அறிஞரின் உளத்தில் தோன்றும் எண்ணங்கள் ஒற்றுமை உடையவாகவே இருக்கின்றன வென்பர். நம் **கோப்பெருஞ் சோழனுக்குக்** காலத்தால் பெரிதும் பிற்பட்டவனும், **அமெரிக்க** நாட்டானுமான **எமர்சன்** என்னும் பேரறி

ஞன் இக் கருத்தையே வேறு முறையில் உருவகப்படுத்தி வெளியிட்டுள்ளான். 'உன்னுடைய தேரை வான் மீன்களோடு இணைத்து, வானவீதியில் நடத்து.' (Hitch your waggon to the stars.) என்றான் அவனும். எனவே, 'யானை வேட்டுவன்' என்னும் சொற்றொடர் நம் பண்டைத் தமிழரின் உயர்வைக் காட்டும் மறைமொழி யாம். இந் நந்தா விளக்கின் ஒளிகொண்டு, தமிழராவார், இடரினும் தளரினும், தம் வாழ்க்கையை மேலான உளப்பாங்கொடும், எண்ணத்தின் எழுச்சியொடும், முயற்சி மேம்பாட்டொடும் நடாத்திவருதல் அவர்தம் கடமை என்பதை நினைவுறுத்தற்கு என்றே இக்குறிப்பு வரையப் பெற்றதாகும்.

தமிழர் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகங்கள்

விலை குறைக்கப்பட்டது — விற்பனையின், ஒருபகுதி

கரந்தைப் பன்னீர்ச்செல்வம் தமிழ்க் கல்லூரி வைப்பு நிதிக்காக உதவப்பெறும்.

	முன் விலை	குறைந்த விலை
1. இன்ப வொழுக்கம்	ரூபா	ரூபா
2. பழந் தமிழர் நாகரிகம்		
3. மொழி நூலும் தமிழும்	3—0—0	2—0—0

தபாற் செலவுக்கு நாலணா சேர்த்தனுப்பவேண்டும்

தமிழர்களே !

நமது மாகாணத்தில் சமஸ்கிருதம் (ஆரியமொழி) கற்றுக்கொடுக்கத் தனிப்பட 17 கல்லூரிகள் அரசியலார் ஒப்புதலும், பணமும் பெற்று நடந்து வருகின்றன. நமது தமிழ் மொழிக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஒன்றும், திருவையாற்றுக் கல்லூரியில் அரைப்பங்குமாக, 1½ அளவுதான் தனிக் கல்லூரி இருந்து வருகிறது. 16—4—38-இல் துவக்கிய கரந்தைப் புலவர் தமிழ்க் கல்லூரிக்குப் போதிய வைப்புநிதி (முன்பணம்) இல்லையென்று அதனை ஒப்புதல் செய்ய அரசியலார் மறுக்கின்றனர். குறைந்தது 25000 ரூபாய்களாவது நிதி ஏற்படுத்தினால் போதுமென்றும் அறிவித்துள்ளனர். தமிழர் வாழ்வே தமது வாழ்வாமென உழைத்த பெருமகனார் திரு. ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களின் நினைவுக் குறியாக, மேற்படி கல்லூரியை அமைத்து, நிதி சேர்ப்பதெனக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் முடிவு செய்துள்ளனர். ஆதலின், மேற்படி புத்தகங்களை வாங்கிக் கரந்தைப் பன்னீர்ச்செல்வம் தமிழ்க் கல்லூரிக்கு உதவி செய்வது தமிழர் ஒவ்வொருவரின் நீங்காக் கடமை யாகும்.

தமிழ் நெறி விளக்கப் பதிப்பகம், செவ்வாய்ப் பேட்டை, சேலம்.

இங்ஙனம், **ஆ. மாணிக்கம்.**

—விடுதலை 26-9-40.

மெய்ப்பாட்டியல்

திரு. எஸ். சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல்., பசுமலை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰சு, மலர் ௫, பக்கம் 188.)

சூத்திரம். 24.

" தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல்
புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாக்கம்
அருள்மிக வுடைமை அன்புதொக நிற்றல்
பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே."

கருத்து :—இது வரைந்துடன் வாழும் கற்புக் காதலுக் குரிய மெய்ப்பாடுகள் கூறுகின்றது.

பொருள் :—தெய்வமஞ்சல் முதல் புறஞ்சொல் மாணாக் கிளவி வரை கூட்டிக் கூறிய பத்தும் அகத்திணையுட் சிறந்த கற்புக் காதற்குப் பொருந்தும் மெய்ப்பாடுகள் என்றவாறு.

குறிப்பு :—ஈற்றேகாரம் அசை. ஒடு பிரிந்து சென்றொன் றும் எண்ணிடைச்சொல். பத்தும் என்பதன் உம்மை இனைத் தென அறிந்த முற்றும்மை. செப்பிய பத்தும் சிறந்த பொருளே எனச்சொன் மாறுக. அன்றிச் சொற்கள் நின் றாங்கே கொண்டு, மாணாக் கிளவியொடு கூட்டி எண்ணி, உயர்ந்த கற்புக் குரியதனாற் சிறந்த பத்து மெய்ப்பாடுகளும் மேல் அழி வில் கூட்டமெனக் குறித்த கற்பொழுக்கத்திற்குரிய என்றுரைப் பினும் அமையும். இதில் 'பொருள்' என்பது, ஈற்றடியைச் சொன்மாறிக் கண்ணழிப்பின், மெய்ப்பாடுகளையும், நின்றாங்கே கொள்ளின், கற்பொழுக்கையும் குறிப்பதாகும். பின்னுரைக்கு பத்தும் என்பதைப் பத்து மெய்ப்பாடும் எனக் கொள்ளல் வேண்டும்.

இனித், தெய்வ மஞ்சலாவது, சூள் பொய்த்தல், பரத்தையிற் பிரிவு முதலிய தலைவன் தவறுகளுக்குக் கடவுள் அணங்குமெனத் தலைவி அஞ்சுவதாம். தெய்வம் தொழாது கணவற் றொழுவதே நல் வில்லாட்டியர் தொல்லற மாதலின், தெய்வம் பரவுதல் என்னாது அஞ்சல் என்று அமையக் கூறிய பெற்றியும் கருதற்பாற்று.

" மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப; யாவதும்
கொடிய ரல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே."

(குறுந். 87)

என்னும் கபிலர் செய்யுளும், தலைவி, வழிபாடு கூறாது, அணங்கும் கடவுளை அஞ்சுதலளவே குறித்தமை அறிக.

புரையறந் தெளிதல் என்பது உயர்ந்த மனையறம் உணர்ந் தோம்புதல். புரை ஈண்டு உயர்ச்சிப் பொருட்டு.

" இது மற் றெவனோ தோழி துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
.................................ஊரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே."

(குறுந். 181)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற் காக்கும் சோர்வின்மையே திண்ணிய கற்பின் பெண்மை யறமென வுணர்ந் தொழுகுபவளே பெண்ணெனக் கூறப்படுதலானுமறிக.

இல்லது காய்தல், கணவன்பால் இல்லாதவற்றை ஏறிட்டு வெகுளுவது.

" கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று." (குறள். 1313)

உள்ளதுவர்த்தல் — இது தலைவன் மெய்யாகச் செய்யும் அன்பினை மறுத்துப் பொய்யென வெறுத்தல்.

"....................................
..................இன்று வந்து,
ஆக வனமுலை அரும்பிய சுணங்கின்
மாசில் கற்பின் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை எள்ளல்அஃ தமைகுந் தில்ல
....
இளமை சென்று தவத்தொல் லஃதே
இனி எவன் செய்வது பொய்ம்மொழி எமக்கே."

(அகம். 6)

எனும் பரணர் அகப்பாட்டு, பிரிந்து வந்த தலைவன் தன் ஆற்றாமையால் பரிந்து தலைவியைத் தழுவிப் பாராட்டவும், அவள் அதைப் பொய்யென வெறுப்பது குறிப்பதால் அது உள்ளது உவர்த்தலாகும்.

புணர்ந்துழி யுண்மைப் பொழுது மறுப் பாக்கம் என்பது, மணந்து வாழ்வார் கற்புக் காதற்கு இடையுறு தடை கடந்தொழுகுத லாகும்.

" காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்"

(குறுந். 32)

என்பதில் கற்புக் காதலின் பொழுது வரையறையின்மை சுட்டியது காண்க.

இத்தொடரைப் 'புணர்ந்துழியுண்மை, பொழுது மறுப் பாக்கம்' எனப் பிரித் தெண்ணிப், பதினொன்றாக்குவர் பேராசிரியர். இது சிறந்த பத்தும் எனத் தெளித்துக் கூறிய சூத்திரச் சொற்றொடர்ச் செம்பொருளொடு முரண்படுவதால், அஃதுரையன்மை அறிக. பதினொன்றைப் பத்தென எண்ணலாமெனுந் தன் கொள்கைக்கு, "ஒன்பதும் குழவியொ டிளமைப் பெயரே" எனு மரபியற் சூத்திர அடியை மேற்கோள் காட்டினார். மரபியற் சூத்திரத்தில், "ஒன்பதும் குழவியொடு" என்பதை "குழவியொடு ஒன்பதும்" என மொழி மாற்றினும்,

எண் பத்தாகாமல் ஒன்பதே யாகும். இங்கு, மொழி மாற்றினும், பேராசிரியர் கொண்டபடி, பத்தாகாமல், பதினொன்றுகின்ற தாதலின், சொல்லொடு பொருள் முரண எண்ணுதற்கும் அம் மரபியற் சூத்திரம் மேற்கோளாகாமை வெளிப்படை.

இனி, முதலுரை வகுத்த இளம்பூரணர் இச் சூத்திரத்தில் மெய்ப்பாடு பத்தெனவே எண்ணினர். எனின், அவர் இத் தொடரைப் பிரித் திரண்டாக்கி, மறைந்தவை யுரைத்தல், புறஞ்சொல் மாணாக்கிளவி எனும் வேறுபடு இரண்டை இணைத்து, ஒன்றாக்கிப், பத்து எண்ணி, அமைவு காட்டுவர். மறைந்தவை யுரைத்தல் தனி மெய்ப்பாடாதலானும், புறஞ்சொல் மாணாக் கிளவிக்கு இவ்வடை வேண்டப்படாமையானும், அவ்விரண்டையும் இணைத்தல் ஏலாமை அறிக. மேலும், புணர்ந்துழி உண்மையைப் பிரிப்பதால் போதரும் பொருட் சிறப்பின்மையும், அது சூத்திரக் கருத் தின்மையை வலியுறுத்தும். ஆதலின், இத்தொடரை நின்றாங்கே ஒரு தொடராக் கொண்டு, அதன் செம்பொருளுரைப்பதே சூத்திரக் கருத்தாதல் தெளிவாம்.

அருள்மிக வுடைமை யாவது, முன் களவில் தலைவன் அருளையே வேண்டிய தலைவி, கற்பினில் தான் அவனை அருளொடு பேணும் பெற்றி.

> "நெடிய திரண்ட தோள்வளை நெகிழ்த்த
> கொடிய னாகிய குன்றுகெழு நாடன்
> வருவதோர் காலை இன்முகந் திரியாது
> கடவுட் கற்பின் அவனெதிர் பேணி
> மடவை மன்ற நீயெனக் கடவுபு
> துனியல், வாழி தோழி! சான்றோர்
> புகழு முன்னர் நாணுப
> பழியாங் கொல்பவோ காணுங் காலே." (குறுந். 252)

எனும் பாட்டில், பழிக்குரிய தலைவன் தவறுரைப்பதும் இழுக்கென வெறுக்கும் தலைவியின் அருள் நயத்தற் குரியது. மனைத்தக்க மாண்புடைய மனைவி இயல்பு, தற்காத்துத் தற்கொண்டாற் பேணுதல் எனும் வள்ளுவர் கொள்கையு மிவ் வுண்மையை வலியுறுத்தும்.

அன்பு தொக நிற்றலாவது, கொழுநன் கொடுமை உள்ளங் கொள்ளாமல், அவன்பாற் காதல் குறையா தொழுகல்.

“ ....காதலர்
நல்கார் நயவா ராயினும்
பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே.” (குறுந். 60)

“ ....பெருங்கல் நாடன்
இனிய னுகவின் இனத்தின் இயன்ற
இன்ன மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தேள் நாடே.” (குறுந். 288)

என்பனவு மது.

“நாடன் நயமுடையன் என்பதனுல் நீயினும்
வாடன் மறந்தன தோள்” (ஐந்திணை எழு. 7)

பிரிவாற்றுமை — களவிற்போலக் கற்பினிற் றலைவி காதலை மறைத்தல் வேண்டாமையின் தலைவன் பிரிவைத் தாங்கா தழுங்குதல்.

“ஒளிறேந்து மருப்பிற் களிறுமா றியற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே” (நற். 284)

“ஆள் வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையே அழிபடர் அகல
வருவர் மன்னுற் றேழி!..........
.......................வரடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீசத்
திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய
நிரைவளை யூருந் தோளென
உரையொடு செல்லு மன்பினர்ப் பெறினே.” (அகம். 255)

மறைந்தவை யுரைத்தலாவது, ஒளித்து நிகழ்வ பின் உவந் தெடுத் துரைப்பது.

“ ....வளங் கேழுரனைப்
புலத்தல் கூடுமோ தோழி!.........
....மார்பகம் பொருந்தி
முயங்கல் விடாஅல் இவையென மயங்கி

யானும் என்னவும் ஒல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே, இனியே
... ...
நெஞ்சறை போகிய அறிவி னேற்கே." (அகம். 26)

எனும் அகப்பாட்டில் மறைவில் நிகழ்ந்ததை மனைவி பின்னர்த் தோழிக்கு எடுத்துரைக்கும் காதல் மாட்சியைக் கண்டு தெளிக.

புறஞ்சொல் மாணாக்கிளவியாவது, தலைவனைப் புறந்தூற்றும் புன்சொல் பொறாத தலைவி அதை வெறுத்து மறுப்பது.

"அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யானெவன் செய்கோ என்றி யானது
நகையென வுணரே னாயின்
என்னா குவைகொல் நன்னுதல் நீயே." (குறுங். 96)

என்னும் குறும்பாட்டில் தலைவனைப் புறம்பழித்த தோழியைத் தலைவி வெகுளுமிம் மெய்ப்பாடு விளக்கம் பெறுத லறிக.

புறஞ்சொல் நன்றாகா தென வெறுக்குந் தலைவியின் மறுப்புரை, புறஞ் சொல் மாணா தெனக் குறிக்குங் கிளவி என்று கூறப்பட்டது.

இனி, முன் 'களவியலில் வேட்கை ஒருதலை உள்ளுதல்' என்னும் சூத்திரத்தில், வேட்கை முதல் சாக்காடீறாகக் கூறிய பத்தும் களவிற்குச் சிறந்தனவாதலின், அவை, "சிறப்புடை மரபினவை களவென மொழிப" எனக் குறிக்கப்பட்டன. அதுவே போல், இங்குக் கூறிய பத்தும் கற்பிற்குச் சிறந்தன வாதலின், "சிறந்த பத்தும் செப்பிய பொருளே" எனப் பட்டன. இன்னும், கரந்தொழுகலால் காமஞ் சாலாத களவினும், வரைந்து உலகறிய உடன் வாழ்ந்து ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றிக் கிழவனும் கிழத்தியும் வாழ்தலால், காமஞ் சான்ற கற்புச் சிறந்தது. அச் சிறந்த வாழ்வு கழிந்த களவின் பயனாகுமெனக் கற்பிய விறுதியில் தெளிக்கப் பட்டிருத்தலால், அன்புத் திணையில் சிறந்தது கற்புக்காதல்; அதற்குச் சிறந்தன இங்குக் கூறப்படும் மெய்ப்பாடு பத்தும் எனும் அமைவு தோன்ற, இப்பத்து மெய்ப்பாடுகளையும், சிறந்த பத்தும் செப்பிய பொருளே எனக்கூறிய பெற்றியும் கொள்ளற்பாலது.

சூத்திரம். 25.

“ பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.”

கருத்து :—இது, தலையாய காதல் நிலைபாவதற்குக் காதல ரிருபாலார்க்கும் வேண்டப்படும் ஒப்புவகை கூறுகின்றது.

பொருள் :—பிறப்பு=தோன்றிய குடிநிலை; குடிமை= ஒழுக்கநிலை; “ஒழுக்க முடைமை குடிமை” என்பதனாலும், பிறப்பு வேறு கூறுவதாலும், இதில் குடிமை ஒழுக்கம் குறிக்கும். ஆண்மை=ஆளுந்திறம்; இது காதலர்க் கின்றியமையா ஒப்பு வகையுள் ஒன்றெனப் படுதலின், இருபாலவர்க்கும் பொது வாதல் தேற்றம். மனையாட்டி, அயலில்லாட்டி, பெண்டாட்டி, வினையாட்டி என்பவற்றாலும், பெண்பாலார் ஆட்சியுண்மை துணியப்படும். ஆண்டு=பருவம்; அதாவது வயது; உருவு= வடிவம்; அதாவது மூப்போ டிளமை முரணா வனப்பு. நிறுத்த காம வாயில்=நிறுத்த காதல்நிலை; நிறை=அடக்கம்; அருள்= பிறர் வருத்தம் பொறாப் பரிவுடைமை; உணர்வு = அறிவு; உணர்ச்சி எனினும் அமையும்; திரு=செல்வம்; இது பொருள் பற்றியதன்று; உள்ள மலர்ச்சி; உள்ள மலர்ச்சி,“செல்வ மென்பது சிந்தையி னிறைவே” என்பதனாலும் இப் பொருட்டாத லறிக. என முறையுறக் கிளந்த ஒப்பினது வகை=என்று நிரலே கூறிய பத்தும் காதலர்க் கின்றியமையா ஒப்பின் வகைய வாம்,

குறிப்பு —ஈற்றேகாரம் அசை. மற்றைய ஏயும் ஓடுவும் எண் ணிடைச்சொற்கள். முன் களவியலில், “ஒன்றே வேறே என்றிரு பால்வயின், ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப” எனும் சூத்திரத்தில் தலைக் காட்சியில் முளைத்த காதல் நிலைத்து வளர்தற் கின்றியமையாதது ஒப்பு என வாளா கூறியது, இங்கு அதன் வகை விரித்து விளக்கப்பட்டது. இது, களவியலி லேனும் அன்றித் தகவுபெற அகப் பகுதியிலேனும் கூறின் அமைவு மிகவுடைத்தாகும். ஆண்டுக் கூறாமையால், உண்மைக்

காதலை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் கூறி முடித்து, அவை நிலைத்த மெய்க் காதற்கே யுரியவாதலின், அக்காதல் நிலைக் குரியதென முன் தொகுத்துக் கூறிய ஒப்பு இங்கு வகுத்து நிறுத்தப்பட்டது. இவை தாமும் மெய்ப்பாடாகாமை, இவற்றின் தன்மையால் தெளியப்படும்.

சூத்திரம். **26**.

> **" நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி**
> **வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு குடிமை**
> **இன்புறல் ஏழைமை, மறப்போ, டொப்புமை**
> **என்றிவை யின்மை என்மனார் புலவர்."**

கருத்து:—இஃது, இவ்வியலிற் கூறிய மெய்ப் பாடுகள் தோன்றுதற் குரிய காதலுக்காகாத குற்றங்களைக் கூறுகின்றது.

பொருள்:— நிம்பிரி=பிழைபொறுப் பெற்றி. அதாவது சகிப்பின்மை. இஃதழுக்காறன்று. அழுக்காறு தனித்தார் மாட்டும் தவறுமாதலானும், இங்குக் காதலர் வாழ்வுக் காகாதன கூறுவதே கருத்தாதலானும், குற்றம் பார்க்கில் சுற்றமில்லை யாமாதலானும், இற்கிழத்திக்கு இன்றியமையா மடன் என்பது தலைவன் குற்றம் தானறியாமை யாதலானும், காணுக்கால் தவறல்லவல்ல காணுத்தலைவி, காணுங்கால் தவறுய காணுள் என இல்லாளியல் சொல்லப் பெறுதலானும், ஈண்டு நிம்பிரி, அழுக்காறு என்னும் பொறுமை சுட்டாது, பிழை பொறுப் பெற்றியே குறிப்பது தெளிவு. அஃதுளதாயின், காதல் வாழ்வுக்கு ஏதமாதலின், விலக்கமாயிற்று. கொடுமை=அறனழியக் கேடு சூழுமியல்பு. வியப்பு=மருட்கை; இதை அற்புதம் என்பர் வடநூலுடையார். இஃது ஒத்த காதலுக்கு ஒல்லாக் குற்றமாகும். மருட்கை மதிமை சாலாதாதலானும், அஃதுள் வழித் தலையாய காதல் நிலையாமையானும், அதுவும் விலக்

காயிற்று.* புறமொழி=பழி தூற்றுதல்; இல்லாட்கு நல்லறம், புறஞ்சொல் மாணுக்கிளவி யென முன் கூறியதனுனே, பழி தூற்றும் தவறுடைமை காதல் வாழ்வுக்கு ஏதம் பயக்கு மாதலின், அது விலக்குதற் குரிய இழுக்காயிற்று. வன்சொல்= வருத்த முறுத்தும் கடுஞ்சொல்; பொச்சாப்பு=சோர்வு. இஃது உவகை மகிழ்ச்சியிற் பிறப்பதாகலின், காதற் கட னிகழ்ந்து ஏதந் தரும் தவருகும்.

மடிமை = சோம்பர்; குடிமை யின்புறல் = தலைவி தன் குடியுயர் வுள்ளி யுவத்தல்; இது கற்புக் காதலுக் கொல்லாது. முன் களவியலில் இருவர்க்கும் குடிமை ஒப்புமை நன்றும்; அன்றேல், "தலைவன் மிக்கோனுதல் தவருகாது" எனக் கூறி, எஞ்ஞான்றும், தலைவி உயர்வைத் தவிர்த்தது, தலைவனுக்கு இழிவுணர்த்தி ஏதம் விளைக்குமாதலின். அதனுல் அது கற்புக் காதலுக்கு இழுக்காயிற்று. ஏழைமை மறப்பு= தலைவி தன் தாழ்வு மறத்தல். ஏழைமை, இங்குத் தணி வுடைமைப் பொருட்டு. அது வெண்மையறிவெனின், தலைவிக்கு வேண்டப்படும் புரையற மறிதல் கூடாதாகலின், அது பொரு ளன்று. அஃகி அகன்ற அறிவுடையளாயினும், பெருமை பிற

* வணிகனும் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணுன்
தணிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந் தடுமாறெய்தி
அணிகுழ லவரை வேறோர் அணங்கெனக் கருதி நீங்கும்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான் தொடர்வின்றி
ஒழுகு நாளில்
(காரைக். அ. பு. 31)

மற்றவர் தம்மை நோக்கி மானுட மிவர்தா மல்லர்
நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே னுத லாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின் என்றுன்.
(காரைக். அ. பு. 47)

கற்பறக்காதல் வாழ்வில் **காரைக்காலம்மையா**ரின் அற்புதச் செயல் கண்டு, அவ் வம்மையை அணங்கென மருண்ட **பரம தத்தனு**க்குக் காதல் நீங்கியதால், வியப்பு காதலுக்கு ஏலாக் குற்றமாதல் காண்க.

அனைத்து முடைய ளாயினும், தணிவொடு பணிதலும், தாழ்ந்தவ னெனினும் தலைவனுயர்வு தன்னுள்ளத்து நிறுத்தலும் கற்புக் காதற் றலைவிக்கு வேண்டும், அதனல், தன் தாழ்வு மறத்தல் இல்லறக் காதலுக்கு இழுக்கென விலக்கப்பட்டது. தலைவிக்கு உயர்குடி உவகை விலக்கியதோ டமையாது, தன் தணிவு மற வாது தலைவனுயர் வுள்ளலு மின்றியமையாதென வற்புறுத்துங் குறிப்பால், குடிமை யின்புறல் கூடாதென்பதனேடு, ஏழைமை மறப்பும் விதந்து விலக்கப்பட்டது.

இனி, ஒப்புமையாவது, தலைவனைப் பிறரொடு ஒப்பு நினைப் பது, அந்நினைவும் கற்பறமழிக்கும் இழுக்காமாதலின், கடியப் பட்டது. முன் எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல் வேண் டப்பட்டதெனின், அது, மலர், மதிபோன்ற பொருள்களை அவற்றிற்கேற்கும் தலைவன் உறுப்போடொப்புமை கோடலே குறித்தலின், அது குற்றமற்ற காதற் குறிப்பு எனக்கொள்ளப் பட்டது. இங்கு பிறரொடு தலைவனின் ஒப்பு நினைப்பது பெண் மைக் கேலாப் பிழையாதலின், அது கடியப்பட்டது. என் றிவை யின்மை=எனக் குறித்த குற்றங்கள் இல்லாமை (காத லர்க்கு வேண்டும்.) என்மனார் புலவர்=என்று கூறுவர் புலவர்.

குறிப்பு—இதில் "ஒடு"க்கள் எண் குறிப்பன. குடிமை யின்புறலை **இளம்பூரணர்** ஒரு தொடராகவே கொண்டு, ஏழைமை மறப்பை இரண்டாக்கிக் குற்றம் பதினென்று கூறுமெனக் கொள்வர். பேராசிரியர் குடிமையும், இன்புறலும் என வெவ்வேறு பிரித்துப் பன்னிரு குற்றம் எண்ணிக் காட்டு வர். குடிமை காதலர்க்கு வேண்டப்படும் ஒப்புவகையுள் ஒன்றெனவும், (மெய்ப். சூ. 25) இன்புறல் உண்மைக் காதற் குறிப் பென்றெண்ணப்படும் மெய்ப்பாடுகளுள் ஒன்றெனவும் (மெய்ப். சூ. 12) இவ்வியல் முன் சூத்திரங்களிற் குறிப்பதனல், அவற்றைக் காதற் கொல்லாக் குற்றமென்றிங்குத் **தொல் காப்பியனர்** கடிந்தாரெனக் கோடல் முன்னெடு பின் முரணு வதால் எனைத்தானும் எண்ணற் பாற்றன்று. ஆதலின், குடிமை யின்புறலை ஒரேதொடராக் கொண்டு பிறப்பின் பெரு

மிதம் தலைவிக் கேலாப் பிழை யெனக் கூறுவதே கருத்தாதல் தேற்றம். அதுவே போல் மறப்பை ஏழைமையின் வேறாகப் பிரித்தல், மேலே பொச்சாப்பு மெய்க்காதற் குறிகளுள் ஒன் றெனக் கூறப்படுதலின், அதனையே மறப் பெனச் சொன் மாற்றிக் காதற்கேலாக் குற்றமெனக் குறிப்பதும் கருதற்கில்லை. அன்றியும், ஏழைமை உணர்வு நன்றாவதன்றிக், காதல் வாழ்வில் கடிவரையின்று. ஆதலின், அவ்விரண்டையும் ஒருங்கெண்ணி, ஏழைமை மறப்பைக் குற்றமாக் கொள்வதே கருதுதல் ஒருதலை. இன்னும் மேலிரு சூத்திரமும் பப்பத்தே கூறுதல் நோக்க, ஈண்டுமவ்வாறு பத்தெனக் கொள்வதே ஏற்புடையதாகும். இனி, " இன்மை என்மனார் " என்பதைக் காதலர்க்கு இன்மை வேண்டும் என விரித்தது பொருள் விளங்கும் பொருட்டும், இன்மை என நிற்பிற் பொருள் முடியாமையானும் என்க.

கூறிய பத்துக் குற்றங்கள் உள்வழி, உண்மைக் காதல் நிலை யாதாதலின், காதல் மெய்ப்பாடுகளைக் காணுதல் அவையற்ற இடத்தாமெனச் சுட்டுதற்கு அவை இவ்வியலிறுதியிற் கூட்டிக் கூறப்பட்டன.

சூத்திரம். 27.

" கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே "

கருத்து—இது மெய்ப்பாடுகளுக்குப் பொதுப் புறநடை யாய், அவற்றினியலும், குறிப்பும் நுண்ணறிவில்லார் எண்ணற் கருமையும் கூறுகின்றது.

பொருள் —கண்ணினு செவியினும் நுண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தர்க்கல்லது=காண்பதும், கேட்பதும் ஆய்வர ஆயும் நுண்மாண் நுழை புலனுடையார்க்கன்றி; நன்னயப் பொருள் கோள்=சிறந்த நயத்தகு மெய்ப்பாடுகளின் இயல்பும் குறிப்பும் உணர்ந்து கோடல்; தெரியின்=ஆராயுங்கால்; எண் ணருங் குரைத்து=நினைதற் கரிது.

குறிப்பு—முதலிரு சொல்லினும்மைகள் எண் குறிப்பன. குரையும், ஈற்றேகாரமும் அசைகள்; இசை நிறை எனினும் ஏற்கும். மெய்ப்பாடு உள்ளுணர்வைக் கொள்ளற்குதவும் குறிப்பாய்ச் சொல்லினும் செயலினும் இருப்பதாகலின், கண்டதும் கேட்டதும் யாப்புறக்கொண்டு, அது விளக்கும் உளக்கிடையைளக்கும் நுண்ணுணர்வு அருமைத் தென்பதைத் தெரிப்பது இச்சூத்திர நோக்கம்.

" ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்" (குறள். 702.)

எனும் **பொய்யில் பொருளுரையில்** கூறுது நோக்கிக் குறிப்பறிதலின் அருமை தெளியப்படும்.

" செறுஅச் சிறுசொல்லும் செற்றார்போ னோக்கும்
உறுஅர்போன் றுற்றார் குறிப்பு " (குறள். 1097.)

எனுமதில் தலைவியின் செறுநோக்கிலுறு நட்புண்மையைக் கண்ணினும், சிறுசொல்லின் நட்புண்மையைச் செவியினுமாகத் தலைவன் தன்னுணர்வால் திண்ணிதினுணர்தல் காண்க.

இனி, 'கண்ணிற் சொல்லிச் செவியினோக்கும்' எனவரும் பாட்டான், அகத்திற்போலப்புறத்திலும் மன்னர் உள்ளுணர்வுகளைக் கண்ணினும், செவியினும் நுண்ணிதின் உணருமாறு கருதுக.

மெய்ப்பாட்டியலுரை முற்றிற்று.

(250-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

அடைப்புகளுக்குள் ஆங்கில எழுத்துச் சொற்களுடன், ஒலித் தெழுதப்படும் ; என்றாலும், தேர்வுக்கு வரும் பேர்கள், தேர்வு களில், அவர்கள் கருத்துப்போல ஆங்கில மூல உருவத்திலோ, ஒலிபெயர்த் தெழுதிய மொழி யுருவத்திலோ, இரண்டிலுமோ, பயன் பெறுத்த ஒப்புக்கொள்ளப்பெறுவார்கள்.

(iv) கணித, அறிவுநூற் சுவடிகளில், ஆங்கிலச் சுவடிகளில் பயன்படுத்தப் பெறும் அரபிய எண்களும், குறியீடுகளும், அடையாளங்களும் வைத்துக்கொள்ளப்பெற வேண்டும்.

ஒவ்வொரு மொழிக்கும் தனிக் குழுக்கள்.

மேற்குறித்த கொள்கைகளின் முறையாக, ஒவ்வொரு மொழியிலும் தொழிலியற் கலைச் சொற்களின் பட்டியல் எழுது வதற்கு, வேறு வேறு கலைகளுக்கும் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ளும் உரிமையுடன், ஒவ்வொரு தென்னிந்திய மொழிக்கும் ஒரு தனிக்குழு அமைக்கவேண்டுமென அரசியலாருக்கு இந்தக் குழு தாங்கிக் கூறுகின்றது. முதலிலடுப்பில், இந்தத் தனிக் குழு ஐந்துருப்பினரைக் கொண்டிருக்கலாம் ; அவருள் ஒருவ ராவது இந்தக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றவரா யிருக்கலாம். மொழிக் குழு ஒவ்வொன்றினு மிருந்து தேர்ந் தெடுக்கப் பெற்ற உறுப்பினரா லாய இன்னொரு தனிக்குழு மேலே (ii), (iii) முடிவுகளிற் குறிக்கப்பட்ட பொதுப் பட்டியலை எழுதவேண்டி அமைக்கப்படலாம்.

இந்தத் தனிக் குழுக்களால் பலவேறு பட்டியல்களும் அனுப்பப்பெற்றவுடன், இந்தக் குழுவின் தாங்குரைகள் எவ்வளவுதூரம் பின்பற்றப்பட்டிருக்கின்றன வென்று ஆராய் தற்கும், இன்றியமையாது வேண்டியபடி சொற்களைத் திருத்துவ தற்கும் இந்தக் குழு மறுபடியும் கூட்டப்பட வேண்டும். பட்டியல்கள் இந்தக் குழுவால் முடிவாக ஏற்றுக்கொள்ளப் பட்டவுடன், ஒப்புக் கொள்ளத் தக்க பாடச் சுவடிகளை எழுது வோராலும், வெளியிடுவோராலும், ஒப்புக்கொள்ளப்பட்ட

பள்ளிகளின் ஆசிரியராலும், பொதுத் தேர்வுகளில் தேர்வாளராலும் பயன்படுத்தப்பட வேண்டுமென அரசியலார் தம் ஆணையால் திட்டப் படுத்த வேண்டியதாயிருக்கும்.

இந்தக் குழுவின் முடிவான பட்டியல், அரசவாணையால் வழங்கப்பெறுமாயினும், இடையிடையே—பேச்சுக்கு, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை—தக்கவாறு அமைக்கப் பெற்ற ஆணையரால் திருத்த மாற்றங்கள் செய்வதற்கு உட்பட்டதாகும். இது, ஒரே வகையான, ஏற்றுக்கொள்ளத் தக்க ஒரு சொன்முறையை நாளாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கு உதவியா யிருப்பதுடன், மாணவரையும் கணக்காயரையும், ஆசிரியரையும், தேர்வாளரையும் பல தனி முறைகளின் கலக்கத்திலிருந்து விடுவிக்கும்.

ஆங்கிலச் சுருக்கெழுத்திலும், ஆங்கிலப் பொறியெழுத்திலும் கல்வி, ஆங்கில மொழி வழியாகவே தான் கொடுக்க முடியுமென்று இந்தக் குழு கருதுகிறது.

சங்கச் செய்திகள்

நம் சங்கச் சார்பில் விக்கிரம, புரட்டாசி, ௳-முதல் ௨௫ முடிய, கலைமகள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. ஒவ்வொரு நாளும் சிறந்த அறிஞர்களால் அரிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அவையாவன :

(க) **கலைமகள் விழா :** திரு. **த. வே. உமாமகேசுவரம் பிள்ளை** அவர்கள், பி. ஏ., பி. எல்.

(உ) **தமிழிசைத் திறம் :** திரு. **வித்துவான் க. வெள்ளைவாரணர்** அவர்கள், தமிழாசிரியர், கலியாணசுந்தரம் உயர்தரப் பள்ளி.

(ங) **சைவப் பிரபந்தங்கள் :** திரு. **பண்டிதர் இ. கோவிந்தசாமி பிள்ளை** அவர்கள், தமிழாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

(ச) **பதிற்றுப் பத்து:** திரு. **பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள், தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

(ரு) **கம்பர் :** திரு. **த. சு. சபாபதி பிள்ளை** அவர்கள், பி. ஏ., ஓய்வு பெற்ற நாட்டுப் பதிவாளர், தஞ்சை.

(சு) **திருவாய்மொழி:** திரு. **வீ. நாராயணுச்சாரியார்** அவர்கள், பி. ஏ., எல். டி., அறிவுநூல் ஆசிரியர், தஞ்சை.

(எ) **அகநானூறு:** திரு. **ஆர். வேங்கடாசலம் பிள்ளை** அவர்கள், தமிழாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

(அ) **கோயில் திருப்பணி:** திரு. **இராம. குமு. இராம. இராம சாமிச் செட்டியார்** அவர்கள், திருப்பணியாளர், தென்குடித் திட்டை.

விக்கிரம, புரட்டாசி 22-ஆம் நாள், திங்கட்கிழமை, நம் சங்கத்துப் **பஞ்சாபகேசன் கழக ஆண்டுவிழா** நிகழ்ந்தது. அன்று, தஞ்சைக் கல்வித் துணைக் கண்காணிப்பாளர், திரு. **சோ. கலியாணசுந்தரம் பிள்ளை** அவர்கள், பி. ஏ., எல். டி., தலைமை தாங்கினார்கள். சங்கக் கல்லூரி மாணவர்களால் சொற்பொழிவுகளும், **இராசராசன்** என்னும் ஆங்கில நாடகமும் நடந்தன. 23-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, **கல்லூரி ஆண்டு விழா** நிகழ்ந்தது. அப்பொழுது, திரு. **பண்டிதர். ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் தலைமை வீற்றிருக்க, அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்று விரிவுரையாளர், திரு. **ச. க. கோவிந்தசாமி பிள்ளை** எம். ஏ., அவர்களால், **சிலப்பதிகாரத்திற் சில நாடக மாந்தர்** என்னும் அரிய சொற்பொழிவு செய்யப்பெற்றது. கல்லூரி மாணவர்களால், **கோப்பெருஞ் சோழன்** என்னும் தமிழ் நாடகம் நடிக்கப்பெற்றது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

நன்கொடைகள்

சங்கம்—பொது	ரூ.	அ.	பை.
திரு. K. மனத்துணைநாத தேசிகர் அவர்கள், பி. ஏ., வலிவலம்	3	2	0
,, N. P. சுந்தரம் பிள்ளை அவர்கள், பி.ஏ., கூடலூர் ஆண்டுவிழாவிற்கு	3	0	0
,, P. A. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்.	5	0	0
,, C. S. கணபதிராவ் பிள்ளை அவர்கள் பி. ஏ., பி. எல்.	0	2	0
,, T. A. வாசுதேவ பிள்ளை அவர்கள், பி. ஏ. தமது பேரன் கல்வித் தொடக்கத்திற்கு	1	0	0
,, Dr. C. செல்லையா அவர்கள், சோகூர்	1	0	0
திக்கற்ற மாணவ ரில்லம்			
,, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல். பஞ்சாபகேசன் நாள் கருதி	2	0	0
,, தெ. துரைசாமி நாட்டார் அவர்கள் தமது தமிழ்த் திருமணம்	1	0	0
,, T. S. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் தமது மகன் கல்வித் தொடக்கத்திற்கு	1	0	0
கல்லூரி			
,, N. A. A. ஜினகுமார முதலியார் அவர்கள்	0	8	0

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.